## ‘விவசாய விரோதி விஜய்’ ஆட்சியின் சோம்பேறித்தனத்தால் சோகத்தில் விவசாயிகள்!

# உழவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும்!

## தஞ்சை ஆர்ப்பாட்டத்தைச் சுட்டிக்காட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஆக. 4-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள தமது சமூக வலைதளத்தில் “உழவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் பெருகும்” என்று த.வெ.க. அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

காவிரி விவசாயிகளுக்காக எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தஞ்சையில் திரண்ட கழகம்!

உழவர் பெருமக்களின் கோரிக் கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும்!

காவிரி பெருக்கெடுக்க வேண்டிய ஆடிப்பெருக்கு நாளில் டெல்டா விவ சாயிகள் ஆதங்கம் பெருக்கெடுக்கப் போராடி வருகின்றனர்!

விவசாயப் பெருங்குடி மக்களின் உணர்வுகளை உரக்கச் சொல்லும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழமைக் கட்சித் தலைவர்கள்

ஜவாஹிருல்லா, தமீமுன் அன் சாரி, நெல்லை முபாரக் ஆகியோருக் கும், அக்கட்சிகளின் நிர்வாகிகள் உள் ளிட்ட தோழர்களுக்கும், பல்வேறு விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் உள்



ளிட்ட அனைவருக்கும் திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விவசாயிகளின் வாழ்க்கையை அடகு வைப்பதா?**

ஜூன் 12 வந்து சேர்ந்திருக்க வேண்டிய காவிரி நீர் ஆகஸ்ட் பிறந் தும் வரவில்லை.

ஆடி பதினெட்டில் பொங்கி வரும் புதுப்புனலை வரவேற்ற காவிரிக்க ரையின் மைந்தர்கள் விவசாய விரோதி விஜய் ஆட்சியின் சோம்பே றித்தனத்தால் சோகத்தில் மூழ்கி யுள்ளனர்.

தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட பேசாத முதலமைச்சரைத் தமிழ்நாடு இப் போதுதான் பார்க்கிறது. அண்டை மாநிலத்தில் திரைப்படம் ஓடுவதற் காக நம் விவசாயிகளின் வாழ்க்கை யையா அடகு வைப்பீர்கள்?

முழுக் கடன் தள்ளுபடி என வாழைப்பழம் போல வாக்குறுதி தந்து வெற்றி பெற்றுவிட்டு, விவசாயி களை ஏமாற்றிய மோசடி ஆட்சியாக இந்தத் த.வெ.க. ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

**கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் துடியாய் துடிக்கும் முதல்வர்!**

மேகதாது அணை கட்டியே தீரு வோம் என அடம் பிடிக்கும் கர்நாட கத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல் லத் துடியாய்த் துடிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று கர்நாடகத்தில்

> **“நாக்பூரில் நம் விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்குக் கூட கண்டனம் தெரிவிக்காமல், கள்ள மவுனம் காக்கிறார் திரையில் தன்னூத்து விவசாயியாக வேடம் தரித்தவர்.”**

நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் பற் றிய செய்திகளைப் பார்த்தாரா? இங்கு அதேபோல் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட முதலமைச்சருக்கு நேரமில்லையா?

**விஜயின் கள்ள மவுனம்!**

விவசாயிகளைச் சந்திக்காமல் புறக்கணித்துவிட்டு, வேளாண் பட் ஜெட்டைத் திருப்பதிக்குத் தூக்கிக் கொண்டு சென்றால் உங்கள் பாவங்



கள் போய்விடுமா?

நாக்பூரில் நம் விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்குக் கூட கண்டனம் தெரிவிக்காமல், கள்ள மவுனம் காக் கிறார் திரையில் தன்னூத்து விவசா யியாக வேடம் தரித்தவர்.

விவசாயிகளை இனியும் வஞ்சிக் காமல் த.வெ.க. அரசு வாக்குறுதிய ளித்தபடி முழுக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

குறுவை சிறப்பு நிவாரணத் தொகுப்பு வழங்கி, டெல்டா மாவட்டங் களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திட வேண்டும்.

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமை யைக் காற்றில் பறக்க விடாமல் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அதுவரை கழகத்தின் போராட்டம் தொடரும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### மேகதாது பிரச்சினை: கர்நாடக அரசைக் கண்டித்து

## தி.மு.கழக எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம் !

### நாடாளுமன்ற வளாகத்தில் பதாகைகளை ஏந்தி கண்டன முழக்கமிட்டனர்!

புதுடெல்லி, ஆக 4-

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட் டும், தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறக்காத கர்நா டக அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத் தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

மேகதாது, காவிரி நீர் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண் டும் என்று நாடாளு மன்ற இரு அவைகளி லும் தி.மு.க. நோட்டீஸ் அளித்தது. ஆனால், அவை கூடியதும், எதிர்க் கட்சிகள் அமளி காரண மாக, மக்களவையும், மாநிலங்களவையும் ஒத்தி வைக்கப்பட்டன.

இதனையடுத்து, நாட ளுமன்ற வளாகத்தில், தமிழ்நாட்டுக்கு தண் ணீர் திறக்காத கர்நாடக அரசைக் கண்டித்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுப்பி னர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, செய்தியா ளர்களிடம் பேசிய மக்க ளவை தி.மு.க. குழு தலை வர் டி.ஆர். பாலு, உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட் டும் கர்நாடக அரசு தண் ணீர் திறக்க மறுப்பதாக குற்றம்சாட்டினார்.

இதன் காரணமாக, மேட்டூர் அணையில் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்படாததால், 20 மாவட்டங்களில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட் டுள்ளதாக தெரிவித்தார். மேலும், பல மாவட்டங் களில் குடிநீர் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாக வும் கூறினார்.

---

### மேகதாது பிரச்சினை:

## நாடாளுமன்றத்தில் தி.மு.க. கடும் அமளி!

### இரு அவைகளும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, ஆக.4-

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் முதல் நாளில் இருந்தே அமளி நீடித்து வருகிறது. 11வது நாளான நேற்றும் மக்களவை மற்றும் மாநி லங்களவையில் மீண்டும் கடும் அமளி ஏற்பட்டது. நீட் முறைகேடு விவகா ரம், மேகதாது மாணவர் போராட்டங்கள் மீதான போலீஸ் நடவடிக்கை, ராமர் கோவில் நன் கொடை விவகாரம் உள் ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி தி.மு.க. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.

இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. தொடக்கத்திலேயே ஏற் பட்ட அமளியால் மக்க ளவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட் டது.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்க ளின் கோஷங்களால் சுமு கமாக அலுவல்கள் நடை பெறவில்லை. தொடர் அமளியால் மாநிலங்க ளவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட் டது. இதற்கிடையே, முக்கிய மசோதாக்களை நிறைவேற்றும் முயற்சி யில் மத்திய அரசு ஈடுபட் டுள்ளது.

மக்களவையில் இந் திய புள்ளியியல் நிறுவ னம் மசோதா, 2026 மற் றும் வங்கியாளர்களின் ஆவண சான்று மசோதா, 2026 ஆகியவை அறிமு கப்படுத்தப்பட உள்ளன. மாநிலங்களவையில் பிறப்புஇறப்பு பதிவுகள் (திருத்தம்) மசோதா, 2026 மற்றும் உச்சநீதி மன்ற நீதிபதிகள் எண் ணிக்கை (திருத்தம்) மசோதா, 2026 ஆகி யவை தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு நிதியுதவி ஒழுங்குமுறை (FCRA) திருத்த மசோதா வும் தாக்கல் செய்யப்பட லாம் என தகவல் வெளி யாகியுள்ளது. நாடாளு மன்றக் கூட்டத்தொட ருக்கு இன்னும் சில வேலை நாட்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், அவையில் தொடர்ந்து அமளி நீடித்து வருகிறது.

---

### இயற்கைக் காடுகளைப் பாதுகாக்க

## சுற்றுச்சூழல் சமநிலைக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

### மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்ல, ஆக. 4-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடா ளுமன்ற உறுப்பினர், டாக் டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று மக்கள வையில், வெப்பமண்டல இயற்கைக் காடுகள் அழிக் கப்பட்ட பின்னர் மரங்க ளின் வளர்ச்சி மீண்டும் ஏற் பட்டாலும், பல்லுயிர் வளம், சுற்றுச்சூழல் செயல் பாடுகள் மற்றும் வனவி லங்கு வாழ்விடங்கள் முழு மையாக மீளுருவாக நீண்ட காலம் தேவைப்படு வதாகக் கூறும் அறிவியல் ஆய்வுகளின் பின்னணியில், தற்போதுள்ள இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல், சீரழிந்த வனப் பகுதிகளை மீளுருவாக்குதல், உள் நாட்டு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாது காத்தல், வனச்சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கி யத்தை கண்காணித்தல் மற் றும் மரக்கன்றுகள் நடும் திட்டங்களில் உயிரினப் பன்முகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் சமநிலைக்கு முன்னுரிமை வழங்க ஒன் றிய அரசு மேற்கொண் டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பி னார்.



இதற்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற் றும் காலநிலை மாற்றத் துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

மரங்கள் இயற்கையாக மீண்டும் வளர்வதன் மூலமோ அல்லது மரக்கன் றுகள் நடுவதன் மூலமோ மரக்கவசம் மீள உருவாக முடிந்தாலும், பல்லுயிர் வளம், சுற்றுச்சூழல் செயல் பாடுகள் மற்றும் வனவி லங்கு வாழ்விடங்கள் முழு மையாக மீளுருவாகுவது அந்தந்தப் பகுதியின் சுற் றுச்சூழல் தன்மைகள் மற் றும் பொருத்தமான மேலாண்மை நடவடிக்கை களைப் பொறுத்து படிப்ப டியாக நடைபெறும் நீண் டகால செயல்முறையாகும் என்று அமைச்சர் தெரிவித் தார்.

இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் சீர ழிந்த வனப் பகுதிகளை மீளுருவாக்கும் பணிகள், உதவியுடன் இயற்கை மீளுருவாக்கம், செயற்கை மீளுருவாக்கம், வன் (பாது காப்பு மற்றும் மேம்பாடு) சட்டம், 1980 மற்றும் இழப்பீட்டு வன வளர்ப்பு நிதிச் சட்டம், 2016 ஆகிய வற்றின் கீழ் மேற்கொள் ளப்படும் இழப்பீட்டு வன வளர்ப்பு நடவடிக்கைகள் வாயிலாக செயல்படுத்தப் பட்டு வருவதாக அமைச் சர் தெரிவித்தார். மேலும், பசுமை இந்தியா இயக்கம், நகர் வன் யோஜனா, கடற் கரை வாழ்விடங்களுக் கான சதுப்புநிலக் காடுகள் மேம்பாட்டு மற்றும் உறுதி யான வருவாய் திட்டம் உள்ளிட்ட பல்வேறு வன வளர்ப்பு மற்றும் மீளுரு வாக்கத் திட்டங்களின் வாயிலாகவும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாக கூறினார்.

**பல்லுயிர் வளம் பாதுகாப்பு!**

இந்தத் திட்டங்கள் அனைத்தும் தொடர்பு டைய சட்டங்கள் மற்றும் திட்ட வழிகாட்டுதல்க ளின் நோக்கங்களுக்கு ஏற்ப செயல்படுத்தப்படுவ துடன், சீரழிந்த வனப் பகு திகளை மீளுருவாக்குதல், அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற உள்நாட்டு மரவகை களை நடுதல் மற்றும் பல்லு யிர் வளத்தைப் பாதுகாத் தல் ஆகியவற்றுக்கு முன்னு ரிமை வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய பணித் திட்டக் குறியீடு-2023இல், நிலை யான வன மேலாண்மைக் கான விரிவான வழிகாட்டு தல்கள் வகுக்கப்பட்டுள்ள தாக அமைச்சர் தெரிவித் தார். அவற்றில் பல்லுயிர் வளப் பாதுகாப்பு, சீரழிந்த வனங்களை மீளுரு வாக்கு தல், வனவிலங்கு வாழ்வி டங்களை மேம்படுத்துதல், மண் மற்றும் நீர் பாது காப்பு மற்றும் ஒவ்வொரு வனப் பகுதியின் தன் மைக்கு ஏற்ப பொருத்த மான வன மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றுக்கு முக்கியத்து வம் வழங்கப்பட்டுள்ளதா கவும் கூறினார்.

**வன விலங்குகளுக்கு பாதுகாப்பு!**

மேலும், நாட்டின் வனப்பரப்பு மற்றும் மரக்க வசம் தொடர்பான தகவல் கள் இந்திய வன ஆய்வு நிறுவனம் வெளியிடும் இந் திய வன நிலை அறிக்கை வாயிலாக குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ந்து கண்காணிக் கப்பட்டு வருவதாக அமை ச்சர் தெரிவித்தார். பல்லு யிர் வளத்தைப் பாதுகாப்ப தற்காக, பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் வலையமைப்பு மற்றும் ஒன்றிய, மாநில அர சுகள் செயல்படுத்தி வரும் பல்வேறு பாதுகாப்பு நடவ டிக்கைகள் வாயிலாக இயற்கை வளங்களும் வன விலங்குகளும் பாதுகாக்கப் பட்டு வருவதாகவும் கூறி னார்.

இயற்கைக் காடுகளைப் பாதுகாப்பதோடு மட்டு மல்லாமல், வன வளர்ப்பு நடவடிக்கைகளிலும் உயிரி னப் பன்முகத்தன்மை, சுற் றுச்சூழல் சமநிலை, நீண்ட கால சுற்றுச்சூழல் நிலைத் தன்மை, உள்நாட்டு மரவ கைகளின் பயன்பாடு மற் றும் சீரழிந்த வனப் பகுதிக ளின் மீளுருவாக்கம் ஆகிய வற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாக வும், இந்நடவடிக்கைகள் தொடர்புடைய சட்டங் கள், திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி தொடர்ந்து செயல்படுத் தப்பட்டு வருவதாகவும் ஒன்றிய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் கால நிலை மாற்றத் துறை மாண் புமிகு இணை அமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் அவர்கள், திமுக அரக்கோ ணம் நாடாளுமன்ற உறுப் பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத் துப்பூர்வமாக அளித்த பதி லில் தெரிவித்துள்ளார்.